## பொறுப்புத்துறப்பு:

நாங்கள் இந்த நோயாளி தகவல் சிற்றேற்றில் தற்போதைய மருத்துவ சான்றுகள் மற்றும் கருத்துகள் அடிப்படையில், முழு மற்றும் சரியான விபரங்களை வழங்க முயற்சி செய்துள்ளோம். எனினும், தகவல் மற்றும் ஆலோசனைகள் பல்வேறு ஆதாரங்களில் இருந்தும், காலப்போக்கிலும் மாறுபடலாம். உங்களுக்கு மேலும் கேள்விகள் இருந்தால், உங்கள் மருத்துவர் அல்லது சுகாதாரச்சேவை வழங்குநரை அணுகவும்.

## முக்கிய குறிப்புகள்

**பிறப்புறுப்பு அக்கி எவ்வாறு என் உறவை பாதிக்கின்றது?**

உங்கள் உறவுடன் நீங்கள் கொண்டுள்ள நேர்மைத்தன்மை உங்களுக்கு ஏற்படும் தேவையற்ற கவலையையும் குழப்பத்தையும் போக்குகிறது. மேலும் உங்களிடமிருந்து உங்கள் துணைக்கோ அல்லது அவரிடமிருந்து உங்களுக்கோ பரவிவிடுமோ என்ற குற்ற உணர்வையும் போக்குகிறது.

உங்களுக்கு பிறப்புறுப்பு அக்கி உள்ளது என்பதை உங்கள் துணையிடம் முன்பே தெரியப்படுத்தவும். இது நீங்கள் அவருக்கு பிறப்புறுப்பு அக்கி வருவதை தடுக்க விரும்புகிறீர்கள் என்பதையும் அவரிடம் நீங்கள் கொண்டுள்ள அக்கறையையும் வெளிப்படுத்துவதோடு உங்கள் உறவை வலுப்படுத்தம் உதவுகிறது.

**உங்கள் துணையிடம் எவ்வாறு தெரியப்படுத்துவது?**

உங்களுடன் உறவு கொள்பவர் புதியவராக இருந்தால் முதலில் அவரிடம் உங்கள் உறவை வளர்க்க நேரம் ஒதுக்கவும். பின்பு அவரிடம் நல்லுறவை ஏற்படுத்திய பின்பு இதைப்பற்றி தெரியப்படுத்தவும்.

நீங்கள் கூறுவதை அவர் எப்படி எடுத்துக்கொள்கிறார் என்பதைப்பொறுத்து நீங்கள் நடந்துகொள்ளவும். இதைப்பற்றி யோசித்து முடிவெடுக்க அவருக்கு காலஅவகாசம் கொடுக்கவும்.

**என்னுடைய துணையை எப்படி பிறப்புறுப்பு அக்கியில் இருந்து பாதுகாப்பது?**

உங்கள் துணையை முதலில் இரத்தப்பரிசோதனை செய்துகொள்ள அறிவுறுத்தவும்.

உங்கள் ஆண்/பெண் துணைக்கு பிறப்புறுப்பு அக்கி இல்லையெனில் அது வராமல் தடுக்க நிறைய வழிமுறைகள் உள்ளன. உடலுறவு கொள்ளும் அனைத்து நேரங்களிலும் ஆணுறையை பயன்படுத்தவும். முடிந்தவரையிலும் உடலுறவு கொள்வதைத் தவிர்க்கவும்.

உடலுறவு கொள்ள நினைக்கும் போது நேரடியாக உடலுறவு கொள்வதைத் தவிர்க்கவும். ஏனெனில் இந்த வைரஸ் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு தோல் மூலமாக எளிதில் பரவும். உங்களுடைய துணை உங்களுடன் உடலுறவு கொள்ள நினைக்கும் போது முதலில் ஏற்படும் கூச்ச உணர்வோ அல்லது எரிச்சல் உணர்வோ எதுவாகினும் உங்கள் புண் குணமாகும் வரை நீங்கள் உடலுறவு கொள்வதை தவிர்க்க வேண்டியது அவசியமாகும்.


உங்கள் இருவருக்கும் ஒரே விதமான HSV தொற்று இருந்தால் மீண்டும் உடலுறவு கொண்டு ஒருவருக்கு ஒருவர் நோய்த்தொற்றை பரவச்செய்து கொள்ள வேண்டாம்.

நோய்த்தொற்று இருப்பது தெரிந்தவுடன் உடனடியாக மருத்துவரை அணுகவும். இது நோய்த்தொற்று தீவிரமடையாமல் தடுக்க உதவும்.

**எங்களிடம் முன்பதிவு செய்துகொள்ளவும்**

முன்பதிவிற்கு அழைக்க வேண்டிய எண்

## எங்கள் இடங்குறிப்பு




**DSC கிளினிக்**

31 Kelantan Lane #01-16 S(200031)

**பஸ் சேவைகள்**

23, 64, 65, 66, 67, 130, 139, 147, 857
Bugis (EWL/DTL)
Rochor (DTL)
Lavender (EWL/DTL)
Farrer Parkr (DTL)

HIV / STI பதி வு செய்யப ்பட்ட தகவ ல்கள்
6295 2944

HIV / STI அவசர உதவிக்கு
1800 - 2521324 (அலுவலக நே ரங்களில்)
எங்களிடம் முன்பதி வு செ ய்து க ொள்ளவும்

## எங்களுடண் சந்திப்பு முண்பதிவு செய்ய

சந்திப்பு முண்பதிவு மையத்தை அழைக்கவும்
6293 9648

அல்லது மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
apptdsc@nsc.com.sg

மேலும் மருத்துவகம் தகவல் கிடைக்க எங்கள் இணையதளம் WWW.DSC-CLINIC.SG
அல்லது எங்கள் FACEBOOK - WWW.FACEBOOK.COM/DSCSG

GH-T-1
Printed - January 2017

# பிறப்புறுப்பு அக்கி

(GENITAL HERPES)

NATIONAL
SKIN
CENTRE

DSC Clinic

## பிறப்புறுப்பு அக்கி என்றால் என்ன?

பிறப்புறுப்பு அக்கி என்பது வைரஸ் தொற்றினால் ஏற்படும் பால்வழிபரவும் நோய் ஆகும். இது வலியை ஏற்படுத்தும். திரும்பத் திரும்ப வரக்கூடியது. ஆனால் கருத்தரித்தல் மற்றும் உடல்நிலையில் எந்தவித நீண்டகால தொந்தரவுகளையும் ஏற்படுத்தாது.

இரண்டுவித பிறப்புறுப்பு அக்கிகள் உள்ளன. HSV-1 மற்றும் HSV - 2

HSV-1 உதடுகளில் "வாய்ப்புண்" ஏற்பட காரணமான வைரஸ் ஆகும். பெரும்பாலும் இன்றைய பெரியவர்கள் தங்கள் குழந்தைப்பருவத்தில் இந்த வைரஸ் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பார்கள். வயது வந்தவர்களிடத்தில் இது வாய்வழி செக்ஸின் மூலமாக பிறப்புறுப்புக்கு பரவுகிறது. பிறப்புறுப்புக்களின் தொடர்புகளாலும் பரவுகிறது.

பெரும்பாலான பிறப்புறுப்புத் தொற்றுக்கள் உடலுறவு கொள்ளும் போது HSV-2 வைரஸால் ஏற்படுகிறது. இத்தொற்று ஏற்பட்டவருக்கு எந்தவித அறிகுறிகளும் தென்படாததால் தொற்று ஏற்பட்டதே அவர்களுக்கு தெரிவதில்லை.

## பிறப்புறுப்பு அக்கி எவ்வாறு பரவுகிறது?

- தொற்று ஏற்பட்ட இடத்தில் நேரடியாக உடலுறவு கொள்ளுவதால் பரவும். கண்ணுக்கு தெரியும் கொப்புளங்கள்/புண்கள் ஏற்படும். ஆனால் அக்கிகள் எந்தவித அறிகுறிகளும் இல்லாத நிலையிலும்கூட பரவும்.
- குழந்தைப் பிறப்பின் போது தாயிடமிருந்து குழந்தைக்கு பரவும்.

பிறப்புறுப்பு அக்கி இருப்பதால் நீங்கள் ஒருவருக்கு ஒருவர் நம்பகத்தன்மையை இழந்ததாக அர்த்தமில்லை. இத்தொற்று முன்பே ஏற்பட்டதாக இருக்கலாம். மேலும் எந்தவிதமான அறிகுறியையும் ஏற்படுத்தாமலும் இருக்கலாம்.

உடலுறவு கொள்ளும் போது ஆணுறையை பயன்படுத்துவதால் பிறப்புறுப்பு அக்கி ஏற்படுவது அல்லது பரவுவதை தடுக்கலாம்(ஆனால் இது 100% பாதுகாப்பைத் தருவதில்லை)

## பிறப்புறுப்பு அக்கியின் அறிகுறிகள் என்னென்ன?

ஆரம்ப நிலை பிறப்புறுப்பு அக்கி

- அதிகமான வலி மற்றும் தீவிரமாதல்
- 2 முதல் 3 வாரங்கள் நீடித்திருத்தல்
- பிறப்புறுப்பில் அல்லது குதப்பகுதியில் உள்ள சிறிய கொப்புளங்கள் உடைந்து புண்ணாக மாறுதல்.
- வயிறு தொடை இணையுமிடம் நிணநீர்ச்சுரப்பி போன்றவை வீங்குதல்

## திரும்பத்திரும்ப தோன்றும் பிறப்புறுப்பு அக்கிகள்

- பொதுவாக இந்த அக்கிகள் வலி குறைந்து பிறப்புறுப்பின் ஒரு பக்கத்தில் மட்டும் காணப்படும்.
- மருந்து எடுத்தோ அல்லது மருந்து எடுக்காமலோ ஒரு வாரத்தில் தானாகவே இந்த அக்கிகள் குணமடைந்துவிடும்.
- கொப்புளங்கள் தோன்றாத இடத்தில் அரிப்பு மற்றும் எரிச்சல் ஏற்படும்.
- அக்கிகள் தோலின் அடிப்பகுதியில் மறைந்து இருக்கும், இது மீண்டும் ஏற்படும் போது தோலின் மேற்பகுதியில் அறிகுறிகள் தோன்ற ஆரம்பிக்கும்.
- திடீர் வெடிப்புகள் உடனடியாக ஏற்படுவதில்லை.
- எல்லோருக்கும் இந்த அக்கிகள் திரும்பத்திரும்ப வருவதில்லை. எவ்வளவு கால இடைவெளியில் அக்கிகள் திரும்பத் தோன்றும் என்றும் சொல்ல முடியாது.

குறிப்பு: எந்த விதமான நோய் அறிகுறிகளற்று இருந்தாலும் வீரியமனான வைரஸ் தோலின் மேற்புறத்தில் உள்ளது. இந்த நேரங்களில் ஆணுறையை உடலுறவின் போது பயன்படுத்துவதால் இத்தொற்றினை தடுக்க முடியும் என்று சொல்லமுடியாது.

## அறிகுறிகள் தோன்றுவது எப்போது?

இத்தொற்று ஏற்பட்டவர்களுக்கு பெரும்பாலும் எவ்வித அறிகுறிகளும் தென்படாததால் அல்லது குறைந்த அறிகுறிகள் தென்படுவதால் இதை கவனிக்கத் தவறிவிடுகிறார்கள்.

தொற்று ஏற்பட்ட 2 முதல் 12 நாட்களுக்கு பின்போ அல்லது சில மாதங்கள் கழித்தோ அல்லது வருடங்கள் கழித்தோ தான் அறிகுறிகள் தென்படுகின்றது.

புண் முழுவதும் குணமாகும் வரை எந்தவிதமான செக்ஸ் செயல்களிலும் ஈடுபடுதல் கூடாது.

## யார் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்?

உங்களுக்கோ அல்லது உங்களுடன் உடலுறவு கொள்ளும் நபருக்கோ பிறப்புறுப்பு அக்கி இருப்பின் உடனே பரிசோதனை செய்துகொள்ள வேண்டியது அவசியம்.

## இந்நோய் வேறு தொந்தரவுகளை ஏற்படுத்துமா?

- தனித்தன்மை வாய்ந்த தோற்றத்தை வைத்து அடையாளம் காணுதல்
- மருத்துவ தாதியாளர் பாதிக்கப்பட்ட பகுதியில் இருந்து ஒரு பருத்தி துடைப்புத்துண்டு குச்சியால் மாதிரியை சேகரிக்கப்பார்
- குறிப்பிட்ட வகையான இரத்தப்பரிசோதனை செய்து கண்டறியலாம். இச்சோதனை இதற்கு முன்பு HSV தொற்று இருந்ததா என்பதை கண்டறியவும் உதவுகிறது
- DSC கிளினிக்கில் நோயாளிகளுக்கு தொடர்சிகிச்சை முறைக்கு முன்பதிவு செய்துகொள்ள வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

* முதல் முறையாக இத்தொற்று ஏற்பட்டவருக்கு பரிசோதனையின் முடிவு 6 வாரங்களுக்கு பின்பு வரை நேர் முடிவு வருவதில்லை.

| HSV-1 | HSV-2 | விளக்கம் |
|---|---|---|
| - | - | இரண்டு வகை வைரஸ் தொற்றாலும் பாதிக்கப்படவில்லை அல்லது தொற்று ஏற்பட்ட உடனே பரிசோதனை செய்து கொண்டதால் சரியான முடிவு தெரியாமல் இருக்கலாம்* .<br>கடந்த ஆறு வாரங்களில் உடலுறவு கொண்டதன் காரணமாக முடிவு சரியாக தெரியாமல் இருக்கலாம். |
| + | - | HSV-1 வகை தொற்று ஏற்பட்டுள்ளது. இது குழந்தைப்பருவத்தில் உதடு மற்றும் வாய்ப்பகுதியில் புண் ஏற்பட்டதால் இருக்கலாம்.<br>இருப்பினும், பொதுவாக இந்த HSV-1 பிறப்புறுப்புத் தொற்று வாய்வழி செக்ஸின் மூலமாக ஏற்படுகிறது. பரிசோதனையில் எந்த இடத்தில் தொற்று உள்ளது என்பது தெரியாது. |
| + | + | HSV-1 மற்றும் HSV-2 ஆகிய இரண்டு வகை தொற்றுக்களும் ஏற்பட்டுள்ளது. பொதுவாக குழந்தைப்பருவத்தில் HSV-1 (வாய்ப்பகுதியில்) தொற்று ஏற்பட்டால் வாலிபப்பருவத்தில் HSV-2 வைரஸ் தொற்று ஏற்படுகிறது. |
| - | + | HSV-2 தொற்று முன்பு ஏற்பட்டுள்ளது. பிறப்புறுப்பில் உடலுறவின் போது இத்தொற்று ஏற்படுகிறது. |

## பிறப்புறுப்பு அக்கி குணப்படுத்தக்கூடியதா?

எவ்வித அறிகுறியும் இல்லையெனில் சிகிச்சை முறை தேவையில்லை.

பிறப்புறுப்பு அக்கி குணப்படுத்த முடியாதது, இருப்பினும் உயிருக்கு ஆபத்தினை விளைவிப்பதில்லை. சிகிச்சை முறைகள் அறிகுறிகளை குறைக்க உதவுகிறது.

நோயின் ஆரம்ப நிலையில் வாய்வழி எதிர்உயிரி மருந்துகளை எடுத்துக்கொள்வதால் நோயின் தீவிரத்தைக் குறைக்கலாம். இது வழக்கமாக நோய்த் தொற்று ஏற்பட்டு முதலில் தீவிரமடையும் போது கொடுக்கப்படுகிறது.

நோயினை ஒடுக்கும் சிகிச்சை (தினமும் மருந்து உட்கொள்ளுதல்) நோயின் தீவிரம் அதிகரிக்கும் போது அளிக்கப்பட்டுகட்டுப்படுத்தப்படு கிறது.

## பிறப்புறுப்பு அக்கி வேறு பாதிப்பை ஏற்படுத்துமா?

எதிர்ப்புசக்தி குறைவாக உள்ளவர்க்கு மற்றும் HIV தொற்று ஏற்பட்டவருக்கு மிகவும் தீவிரமான மற்றும் உறுதியான பாதிப்பை ஏற்படுத்துகிறது. முதலில் தொற்று ஏற்படும் போது சிறுநீர்கழிக்கும் போது தொந்தரவு ஏற்படுகிறது.

## கர்ப்பகாலத்தில் பிறப்புறுப்பு அக்கி

கர்ப்பமாக இருக்கும் போது இந்நோய்த்தொற்று ஏற்பட்டால் அது கருவில் இருக்கும் குழந்தைக்கும் பரவுகிறது. எனவே உங்கள் மகப்பேறு மருத்துவரிடம் முன்பே தெரிவித்து சரியான பிரசவ முறைகளை பின்பற்றவும்.

அக்கி குழந்தைக்கு தீவிரமான பாதிப்பை ஏற்படுத்தும். (எ.கா.: கண் பார்வை இழப்பு, மூளை பாதிப்பு)

குறிப்பு: கர்ப்பமாகும் முன்பே அக்கி ஏற்பட்டால் அது குறைவான பாதிப்பையே ஏற்படுத்துகிறது. கர்ப்பமான பின்பு முதன்முறையாக அக்கி தோன்றுவது தீவிரமான பாதிப்பை ஏற்படுத்துகிறது. ஆனால் இது கர்ப்பமடைவதை பாதிப்பதில்லை.